ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2325/54 - 2023 මාර්තු මස 31 වැනි සිකුරාදා - 2023.03.31
2325/54 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***10 வது திருத்தம்***

இலங்கை தாதியர் சேவை பிரமாணக்குறிப்பு

*2013, நவெம்பர் 19 ஆந் திகதிய 1837/8 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கீழே பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி திருத்தப்பட்ட இலங்கை தாதியர் சேவை பிரமாணக்குறிப்பு கீழே பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீண்டும் திருத்தப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிற விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் உள்ளன.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

**எஸ். ஜனக ஸ்ரீ சந்திரகுப்த,**
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

*2023, மாச்சு 31.*

பகுதி I

திருத்த இலக்கம் 1 - 2014, செத்தெம்பர் 23 ஆந் திகதிய இலக்கம் 1881/14 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 2 - 2016, மே 11 ஆந் திகதிய இலக்கம் 1966/23 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 3 - 2016, செத்தெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் 1986/10 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 4 - 2017, யூன் 07 ஆந் திகதிய இலக்கம் 2022/18 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 5 - 2018, ஓகத்து 27 ஆந் திகதிய இலக்கம் 2086/3 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்

1A - G 39229 — 07 (2023/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்த இலக்கம் 6 - 2018, செத்தெம்பர் 07 ஆந் திகதிய இலக்கம் 2087/75 எனும் அதிவிடே வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 7 - 2020, பெப்புருவரி 25 ஆந் திகதிய இலக்கம் 2164/13 எனும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 8 - 2021, யூலை 30 ஆந் திகதிய இலக்கம் 2238/33 எனும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 9 - 2021, ஓகத்து 03 ஆந் திகதிய இலக்கம் 2239/25 எனும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

பகுதி II

10.1.1.1 இல் (iv) 10.2.1.1 இல் (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு பொருந்தும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி ஒழுக்காற்று தண்டனைகள் வழங்கப்படாதிருத்தல்.

20.2.2. III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தல்.

(அ) 2020, பெப்புருவரி 25 ஆந் திகதிய இலக்கம் 2164 / 13 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் 20.2.2 பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) 2021.07.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் முந்தைய சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கான தகுதியை நிறைவு செய்துள்ள, ஆனால் II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெறாத உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் விதிகள் பொருந்தும்.

முந்தைய சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிறைகளுக்கு அமைய II ஆந் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கான தகுதியை நிறைவு செய்துள்ள தினத்தில் இருந்து 2021.07.05 ஆந் திகதி வரையான தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கும் போது II ஆம் தரத்தின் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலமாக கருதப்படும்.

20.2.4 I ஆம் தரத்திலிருந்து அதி தரத்திற்கு பதவியுயர்த்தல்.

(அ) 9 வது சேவைப் பிரமாணக் குறிப்பு திருத்தம் நடைமுறைக்கு வரும் 2021.07.05 ஆந் திகதிக்கு முன்னர் I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள், I ஆம் தரத்தில் 07 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யும் தினத்தில் இருந்து 10.3.1 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தவிர்த்து அதன் கீழுள்ள ஏனைய தகுதிகளைக் கருத்தில் கொண்டு அதி தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்படும்.

(ஆ) 9 வது சேவைப் பிரமாணக் குறிப்பு திருத்தம் நடைமுறைக்கு வரும் 2021.07.05 ஆந் திகதிக்கு முன்னர் II ஆம் தரத்தில் 07 வருடங்களை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள், அதி தரத்தில் பதவி உயர்வு வழங்கும் போது I ஆம் தரத்தில் 07 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்துடன் தாதியர் சேவையில் 22 வருட இணைந்த தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்தி செய்யும் தினத்தில் இருந்து 10.3.1 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தவிர்த்து அதன் கீழுள்ள ஏனைய தகுதிகளைக் கருத்தில் கொண்டு பதவி உயர்வு வழங்கப்படும்.

(இ) 9 வது சேவைப் பிரமாணக் குறிப்பு திருத்தம் நடைமுறைக்கு வரும் 2021.07.05 ஆந் திகதிக்கு முன்னர் அதி தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள், அதிகபட்சமாக 03 வருட காலத்திற்கு உட்பட்டு I ஆம் தரத்தில் 07 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் அந்த உத்தியோகத்திரின் அதி தரத்தின் சேவைக்காலமாக கருதப்படும். இருப்பினும், இந்த விதிமுறைகளின் படி அதி தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட தினத்தில் எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாது.

EOG 03 - 0383

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.